# பிரதமர் லீ: பகுதிநேர மாணவர்களின் கட்டணம், உதவி நிதி பரிசீலிக்கப்படும்

பகுதிநேர மாணவர்களின் கல்விக் கட்டணங்களும் உதவி நிதிகளும் பரிசீலிக்கப்படவிருப்பதாகப் பிரதமர் திரு லீ சியன் லூங் நேற்று முன்தினம் கூறினார்.

உயர்கல்வி பயில்வது மேலும் கட்டுப்படியாக்கப்படும் என சென்ற மாதம் நடைபெற்ற தேசிய நாள் பேரணியின்போது அறிவித்ததைத் தொடர்ந்து பிரதமர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

பரிசீலனையை அடுத்து அவசியம் ஏற்பட்டால் இந்தக் கட்டணங்களிலும் உதவி நிதிகளிலும் மாற்றம் செய்யப்படும் என சிங்கப்பூர் சமூகவியல் பல்கலைக்கழகம் முதல் முறையாக ஏற்பாடு செய்திருந்த அமைச்சர்நிலை உரையாடல் அங்கத்தில் அவர் குறிப்பிட்டார்.

முழுநேர மாணவர்களுக்குக் கூடுதல் நிதி உதவி, குறைவான கட்டணம் ஆகியவற்றுடன் அரசாங்கம் உதவி செய்திருப்பதைப் போல பகுதிநேர மாணவர்களுக்கு இன்னமும் செய்யப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

“நாங்கள் அவற்றைப் பார்த்தோம், ஆனால் இந்தக் கட்டணங்களும் உதவி நிதிகளும் வேலை செய்யும் பெரியவர்களுக்குக் கட்டுப்படியாகவேண்டும் என நினைக்கிறோம்,” என்று கருத்து கூறினார் பிரதமர் லீ.




வாழ்நாள் கற்றல், பல்கலைக்கழகக் கல்வி ஆகியவற்றின் மதிப்பு, தொழில்நுட்ப மாற்றங்கள் குறித்து பிரதமரும் 500 சமூகவியல் பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று முன்தினம் கலந்துரையாடினர்.

படம்: வான்பாவ்

சிங்கப்பூரில் தரமான, உற்பத்தித்திறன்மிக்க ஊழியர் அணி இருப்பதாகப் பிரதமர் லீ நம்பிக்கை தெரிவித்தார். இதனால்தான் ஃபின்லாந்தின் நெஸ்டி எண்ணெய் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் இங்கு முதலீடு செய்கின்றன என்றார் அவர்.

ஆனால், பிறப்பு விகிதமும் ஊழியர் அணியில் சேர்வோர் எண்ணிக்கையும் குறைவாக இருப்பதால் போதுமான சிங்கப்பூரர்கள் இல்லை என்று அவர் கூறினார்.

“எனவே நாம் வெளிநாட்டுத் திறனாளர்களை வரவழைக்காவிட்டால் நமக்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் நம்மால் பயன்படுத்திக்கொள்ள முடியாது என நான் நினைக்கவில்லை,” என்றார் திரு லீ.